# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

<u>ஆணை நாள் 17.11.2020</u>

**<u>முன்னிலை</u>**

**முனைவர் ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 428/B/19</u>**

திரு P. ஜம்புலிங்கம் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
விருத்தாச்சலம் வட்டாட்சியர் அலுவலகம்.
கடலூர் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (17.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு P. ஜம்புலிங்கம் மற்றும் பொது தகவல் அலுவலர், திருமதி பூர்ணிமா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், விருத்தாச்சலம் வட்டாட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 28.06.2018 தேதியிட்ட மனுவில், Status on Removal of Encroachment in front of my house located in 63A, Southstreet, Melakuppam, Ammeri Panchayat, Virudhachalam taluka Panchayat, Virudhachalam taluka என்பதன் தகவல்கள் கோரி கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பொது தகவல் அலுவலர் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. தகவல்கள் வழங்கப்படாததால் மனுதாரர், 29.09.2018 தேதியிட்ட மனுவில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். முழுமையான தகவல்களை பெற்றுத் தருமாறு தெரிவித்து, மனுதாரர் 31.12.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் தொலைபேசியின் வாயிலாக மனுதாரர் தான் கோரிய தகவல்கள் பொது தகவல் அலுவலரால் தனக்கு கிடைக்கப்பெற்றது என்றும், ஆகையால் மேற்கொண்டு விசாரணை தேவையில்லை என்றும் தெரிவித்ததன் அடிப்படையில், மனுதாரர்

கோரியுள்ள தகவல்கள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக கருதி, இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 428/B/19**
**பெறுநர்**
பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
விருத்தாச்சலம் வட்டாட்சியர் அலுவலகம்.
கடலூர் மாவட்டம்.

திரு P. ஜம்புலிங்கம்,
த/பெ பழனி,
B2 Kattalai street,
Block 19,
நெய்வேலி 607 803

Copy to: File
SCPA-19.11.20